# கோவிட்-19 தொற்றுக்கு மேலும் 96 பேர் பலி



புத்ராஜெயா, அக். 23-
நாட்டில் நேற்று முன்தினம் மேலும் 96 பேர் கோவிட்-19 தொற்றினால் மரணமடைந்தனர். அவர்களில் 21 பேர் மரணமடைந்த நிலையில் மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டனர் என்று சுகாதார அமைச்சரகம் தெரிவித்தது.

இதுவரை கோவிட்-19 தொற்றினால் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை 28,234 ஆக அதிகரித்திருக்கிறது. அவர்களில் 5,701 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதற்கு முன்னதாகவே உயிரிழந்தனர். கடந்த இரண்டு வாரங்களில் 791 பேர் மரணமடைந்தனர்.

ஜொகூரில் மட்டும் 97 பேர் உயிரிழந்தனர். மரணமடைந்தவர்களில் 77.4 விழுக்காட்டினர் தடுப்பூசி போட்டுக் கொள்ளாதவர்கள். அவர்கள் 60 வயதுக்கும் மேற்பட்டவர்கள். அவர்களில் முக்கால்வாசி பேர் தீராத நோய்களினால் அவதிப்பட்டு வந்தவர்கள்.

இதனிடையே நேற்று முன்தினம் ஒரேநாளில் மட்டும் 6,210 பேருக்கு தொற்று பாதிப்பு கண்டது. அதன்வழி பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 24 லட்சத்து 13 ஆயிரத்து 592 ஆக உயர்வு கண்டது. நேற்று முன்தினம்வரை 24 லட்சம் பேர் இந்தத் தொற்றிலிருந்து முழுமையாகக் குணமடைந்திருக்கின்றனர்.

# பதின்ம வயதினருக்கு தடுப்பூசிகள் முன்னணியில் மலேசியா!



கோலாலம்பூர், அக். 23-
பதின்ம வயதினருக்கு கோவிட்-19 தடுப்பூசி போடும் பணிகளில் உலகிலே மலேசியாதான் முன்னணி வகிக்கிறது என்று சுகாதார அமைச்சர் கைரி ஜமாலுடின் தெரிவித்தார்.

மேம்பாடு கண்ட நாடுகளுடன் போட்டி போட்டுக்கொண்டு மலேசியா தனது பதின்ம வயது மக்களுக்கு தடுப்பூசி போடுவதில் மகத்தான வெற்றியை பெற்றிருக்கிறது. இது பெருமிதத்தை அளிக்கிறது என்றார் அவர்.

கோவிட்-19 தொற்று அபாயத்திலிருந்து குழந்தைகள், மாணவர்கள், சிறார்கள் உட்பட பதின்ம வயதினருக்கு தடுப்பூசி போடும் பணி கடந்த செப்டம்பர் 8ஆம்தேதி தொடங்கியது. நேற்று வரையில் 12 லிருந்து 17 வயதுக்குட்பட்டவர்களில் 44.3 விழுக்காட்டினருக்கு அதாவது 13 லட்சத்து 67 ஆயிரத்து 216 பேருக்கு முழு அளவில் தடுப்பூசிகள் போடப்பட்டிருக்கின்றன.

மேலும் 36.8 விழுக்காட்டினருக்கு அதாவது 11 லட்சத்து 56 ஆயிரத்து 940 பேர் முதல் தடவையாக தடுப்பூசி செலுத்திக் கொண்டிருக் கின்ற னர். நாட்டிலுள்ள 32 லட்சம் பதின்ம வயதினருக்கு தடுப்பூசி போடப்படுவது உறுதி செய்யப்படும். இந்த தடுப்பூசி போடும் திட்டம் மிகச் சிறப்பாக நடைபெறுவதற்கு காரணமாக இருக்கின்ற சுகாதார தலைமை இயக்குநர் டான்ஸ்ரீ டாக்டர் நூர் ஹிஷாம், துணை சுகாதார அமைச்சர் நூர் அஸ்மி, துணை கல்வி அமைச்சர் மா ஹங் சுன் ஆகியோருக்கு இந்த வேளையில் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்வதாக கைரி கூறினார்.

# 2 கோடியே 20 லட்சம் பெரியவர்களுக்கு முழு தடுப்பூசிகள்



கோலாலம்பூர், அக். 23-
நாட்டில் இதுவரை 94.3 விழுக்காட்டு பெரியவர்களுக்கு முழு அளவில் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டிருக்கின்றன என்று சுகாதார அமைச்சர் கைரி ஜமாலுடின் தெரிவித்தார்.

கோவிட்-19 தொற்றுப்பரவல் மோசமடைந்ததையடுத்து கடந்த பிப்ரவரி 24ஆம் தேதி தடுப்பூசி போடும் பணி தொடங்கியது. நேற்று வரையில் 94.3 விழுக்காட்டுப் பெரியவர்கள் அதாவது 2 கோடியே 20 லட்சத்து 84 ஆயிரத்து 594 பேருக்கு முழு அளவில் தடுப்பூசிகள் போடப்பட்டிருக்கின்றன.

அதேவேளையில் 97.3 விழுக்காட்டுப் பெரியவர்கள் அதாவது 2 கோடியே 27 லட்சத்து 92 ஆயிரத்து 916 பேர் முதல் தடவையாக தடுப்பூசி செலுத்திக் கொண்டனர். நேற்று முன்தினம் ஒரே நாளில் 2 லட்சத்து 35 ஆயிரத்து 607 பேருக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டன.

இதுவரையில் 4 கோடியே 86 லட்சத்து 73 ஆயிரத்து 215 தடுப்பூசிகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. அடுத்தாண்டு பிப்ரவரி மாதத்திற்குள் நாட்டு மக்கள் தொகையில் 80 விழுக்காட்டினருக்கு தடுப்பூசி போடப்படுவது உறுதி செய்யப்படும் என்றும் கைரி ஜமாலுடின் தெரிவித்தார்.

# 2,753 ஆசிரியர்கள் தடுப்பூசி போடவில்லை



கோலாலம்பூர், அக். 23-
நாட்டில் இன்னமும் 2,753 ஆசிரியர்கள் மட்டுமே கோவிட்-19 தடுப்பூசி போட்டுக்கொள்ளவில்லை என்று கல்வியமைச்சர் டத்தோ ரட்ஸி ஜிடின் தெரிவித்தார். அவர்களில் 1993 பேர் சமய காரணங்களுக்காக தடுப்பூசி போட்டுக் கொள்ள மறுத்து விட்டனர்.

எஞ்சிய 760 பேர் மருத்துவ காரணங்களுக்காக தடுப்பூசி போடவில்லை. கடுமையான நோய்கள், ஒவ்வாமை காரணமாகவும் சிலர் தடுப்பூசி போட முன்வரவில்லை. தாய்ப்பால் புகட்டும் நிலையில் இருப்ப தால் சில தாய்மார்களும் சில கர்ப்பிணிப் பெண்களும் தடுப்பூசி போட்டுக் கொள்ள தயங்குகின்றனர்.

தடுப்பூசி போட்டுக் கொள் ளாத ஆசிரியர்கள் பள்ளிகளில் மாணவர்களுக்கு நேரடியாக பாடம் போதிப்பதற்கு அனுமதி வழங்கப் படாது. எந்த காரணத்திற்காக தடுப்பூசி போட்டுக் கொள்ள விரும்ப வில்லை என்பதை அவர்கள் அரசாங்க சுகாதார அதிகாரிகளின் சான்றிதழ் மூலமாக காரணத்தை தெரி விக்க வேண்டும்.

அதேவேளையில் நேற்று வரையில் 96.83 விழுக்காட்டு ஆசிரியர்கள் அதாவது 39,972 ஆசிரியர்கள் முழு அளவில் தடுப்பூசி செலுத்திக் கொண்டிருக்கின்றனர். பள்ளி நிர்வாகிகள், உதவியாளர்கள் உட்பட 63,724 கல்வியமைச் சின் பணியாளர்களும் தடுப் பூசியை செலுத்திக் கொண்டிருக்கின்றனர்.

நீண்ட காலத்திற்குப் பிறகு கடந்த அக்டோபர் 3ஆம்தேதி பள்ளிகள் திறக்கப்பட்டன. பள்ளிகளுக்கு வருகின்ற ஆசிரியர்கள் முழு நேரமும் முகக் கவசங்களையும் முகப் பாதுகாப்பு கண்ணாடிக் கவசங்களையும் அணிந்திருப்பது கட்டாயம் என்றும் ரட்ஸி ஜிடின் வலியுறுத்தினார்.

# மூன்றாவது தடுப்பூசித் திட்டம் விரிவுபடுத்தப்படும்




கோலாலம்பூர், அக். 23-
கூடுதல் தடுப்பூசித் திட்டம் அதாவது மூன்றாவது தடுப்பூசி போடும் திட்டம் மேலும் விரிவுபடுத்தப்படும் என்று சுகாதார அமைச்சர் கைரி ஜமாலுடின் தெரிவித்தார்.

கிள்ளான் பள்ளத்தாக்கில் உள்ள மருத்துவமனைகளில் நோயாளிகளின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்த வண்ணம் இருக்கிறது. கோவிட்-19 தொற்றினால் பாதிக்கப் பட்டவர்கள் சிகிச்சைக்காக இங்கு வருகின்றனர்.

நிலைமையை சமாளிப்பதற்காக 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மூன்றாவது தடுப்பூசியை செலுத்தும் நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டிருக்கிறது. மூன்று மாதங்களுக்கு முன்னர் சினோவாக் தடுப்பூசி போட்டுக் கொண்டவர்களுக்கும் இந்த மூன்றாவது தடுப்பூசி போட அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

மூன்றாவது தடுப்பூசி என்பது கட்டாயமல்ல. அது இலவசம். விருப்பம் உள்ளவர்கள் அதனை செலுத்திக் கொள்ளலாம் என்றார் கைரி.

# சிங்கையில் மலேசியத் தொழிலாளி தொற்றினால் மரணம்



சிங்கப்பூர்,அக். 23-
சிங்கப்பூர் குடியரசில் நேற்று முன்தினம் ஒரே நாளில் மட்டும் கோவிட்-19 தொற்றினால் 16 பேர் மரணமடைந்தனர். அவர்களில் ஒருவர் மலேசியர். இவர் நீண்டகாலமாக சிங்கப்பூரில் வேலை செய்து வந்தவர் என்று சிங்கப்பூர் சுகாதார அமைச்சரகம் தெரிவித்தது.

எஞ்சிய 15 பேரில் நால்வர் பெண்கள். 11 பேர் ஆண்கள். இவர்கள் அனைவரும் சிங்கப்பூர் நாட்டைச் சேர்ந்தவர் கள். மரணமடைந்தவர்கள் 61 முதல் 93 வயதுக்குட்பட்டவர்கள். அவர்களில் 8 பேர் தடுப்பூசி போட்டுக் கொள்ளாதவர்கள். 7 பேர் முழுமையாக தடுப்பூசி போட்டுக் கொண்டவர்கள். ஒருவர் மட்டும் ஒரே தடவை தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்.

சிங்கப்பூர் குடியரசில் இது வரை இந்தத் தொற்றினால் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை 280 ஆக அதிகரித்திருக்கிறது. நேற்று முன்தினம் சிங்கப்பூரில் 3,439 பேருக்கு பாதிப்பு கண்டது. அதனுடன் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1 லட்சத்து 62 ஆயிரத்து 26 ஆக அதிகரித்தது.

நேற்று முன்தினம் தொற்று கண்டவர்களில் 500 பேர் அந்நியத் தொழிலாளர்கள். சிங்கப்பூரில் இதுவரை 84 விழுக்காட்டினருக்கு முழு அளவில் தடுப்பூசி போடப்பட்டிருக்கிறது.

# சிறிய, நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு நிதியுதவி

கோலாலம்பூர், அக். 23-
கோவிட்-19 தொற்று காரணமாக பாதிக்கப்பட்ட சிறிய, நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு இதுவரை 8 கோடியே 64 லட்சம் வெள்ளி உதவித் தொகையாக வழங்கப்பட்டிருக்கிறது என்று நிதியமைச்சர் தெங்கு ஸஃப்ருல் அப்துல் அஸிஸ் தெரிவித்தார்.

கடந்த அக்டோபர் 8ஆம்தேதி வரையில் பெஞ்சானா எனப்படும் தேசிய பொருளாதார மீட்சித் திட்டத்தின் கீழ் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. இதன்வழி 13,786 நிறுவனங்கள் நன்மை அடைந்தன. விவசாய மின்னியல் திட்டத்தின் கீழ் 17,000 நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டிருக்கிறது.

அதேவேளையில் விவசாயிகள், மீனவர்கள், தோட்டத் தொழில் உரிமையாளர்கள் ஆகியோருக்கு 40 கோடி வெள்ளி வரை உதவித்தொகை வழங்கப்பட்டிருக்கிறது. தேசிய பயிற்சி உதவித் திட்டத்தின் கீழ் 1 லட்சத்து 37 ஆயிரத்து 559 பேருக்கு வேலை வாய்ப்புகள் கிடைத்திருக்கின்றன.

சில்லறைத் தொழில், தயாரிப்புத் தொழில் துறை ஆகியவற்றில் நிலவும் தொழிலாளர் பற்றாக் குறையை சமாளிப்பதற்காக அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்றும் ஸஃப்ருல் தெரிவித்தார்.

# லங்காவி வர வெளிநாட்டுப் பயணிகளுக்கும் அனுமதி



கோலாலம்பூர், அக். 23-
கோவிட்-19 தொற்றுப் பரவல் அபாயம் தணியத் தொடங்கியிருப்பதால் அடுத்தாண்டு முதல் வெளிநாடுகளைச் சேர்ந்த சுற்றுப்பயணிகள் லங்காவித் தீவுக்கு செல்ல அனுமதி வழங்கப்படும் என்று சுற்றுலா கலை கலாச்சாரத்துறை அமைச்சர் நான்சி சுக்ரி தெரிவித்தார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட நாடுகளைச் சேர்ந்த சுற்றுப் பயணிகள் லங்காவி தீவுக்கு செல்ல அனுமதி வழங்க அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. ஒன்றரை ஆண்டுகளுக்கு பிறகு கடந்த செப்டம்பர் 16ஆம்தேதி சுற்றுப்பயணிகளுக்காக லங்காவி தீவு திறக்கப்பட் டது. இப்போது அங்கு பல்வேறு விதிமுறைகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. தினமும் ஆயிரக்கணக்கானோர் லங்காவி தீவுக்கு வருகின்றனர். இதனையடுத்து டிசம்பர் மாதத்தில் வெளிநாட்டுப் பயணிகளும் லங்காவிக்கு வர அனுமதிக்கப்படுவார்கள். எந்தெந்த நாடுகளுக்கு அனுமதி வழங்குவது குறித்து விரைவில் முடிவு செய்யப்படும்.



AG:08529/23/10/21